2006 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

72—

தொழிற்பயிற்சி நிலையம்

***40347—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, காவேரிப்பாக்கத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பு ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் உழவர் பாதுகாப்புத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்ற செய்தியினைக் கேட்டு தமிழக மக்கள் அனைவரும் இன்புற்றிருக்கிற இந்த வேளையிலே சோளிங்கர் தொகுதி விவசாயப் பெருமக்களின் சார்பாகவும், காவேரிப்பாக்கம் சிறப்பு ஊராட்சியின் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியினை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களிலே காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி 86 ஊராட்சிகளையும், 2 சிறப்பு ஊராட்சிகளையும் உள்ளிட்ட தொகுதியாகும். அந்த வகையிலே காவேரிப்பாக்கம் சிறப்பு ஊராட்சி ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்டத்தினுடைய பெரிய ஏரியைக் கொண்ட பகுதியாகும். நிறைய நஞ்சை நிலங்களைக் கொண்ட பகுதியாகும். விவசாயத்தைத் தவிர வேறு தொழிலே இல்லை என்கிற நிலையிலே சோளிங்கர் தொகுதி இப்போது இருக்கிறது. அங்குள்ள மாணவ, மாணவிகள் தொழில் கற்கின்ற வகையிலே தொழிற்கல்வி பயில வேண்டுமானால் 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள

வேலூருக்கும், 40 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள காஞ்சிபுரத்திற்கும், அல்லது 45 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள அரக்கோணம் பகுதிக்கும் செல்லவேண்டிய ஒரு நிலை இருக்கிற காரணத்தினாலே, அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கேட்டவற்றையெல்லாம் வழங்கப்படுகிற இந்த நேரத்திலே சோளிங்கர் தொகுதி மக்களுடைய கோரிக்கையான, காவேரிப்பாக்கம் சிறப்பு ஊராட்சி மக்களுடைய கோரிக்கையான தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் அரக்கோணம், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 986 இருக்கைகளோடு இயங்கி வருகின்றன. தற்போது பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 896 ஆகும். காலி இடங்கள் 90. இவைதவிர, 37 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 4,568 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. தற்போது 2,504 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். காலி இடங்கள் 2,064. சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, காவேரிப்பாக்கத்தில் இரண்டு தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 190 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. தற்போது 60 மாணவர்கள்தான் பயிற்சி பெற்று வருகிறார்கள். காலியிடங்கள் 130. மேற்கண்டவாறு, வேலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் காலியிடங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, காவேரிப்பாக்கத்தில் 2 தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் காலியிடங்கள் 130 இருக்கிற காரணத்தினால், கூடுதலாக ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, (குறுக்கீடு) இல்லை, ஏற்கெனவே காலியிடம் இருக்கிறது என்று சொல்கிறார். அதற்கே ஆள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடு) திரு. வில்வநாதன், சொல்லுங்கள்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தனியார் தொழில் பயிற்சி மையங்கள் இருப்பதாகச்

TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 21]

சொன்னார்கள், உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட மையங்களிலே மாணவர்கள் சேரத் தயங்குகிறார்கள். காரணம், என்னவென்று சொன்னால், கல்வி வசதிக்கேற்ற போதிய கருவிகள் அங்கு இல்லை, ஆசிரியர்கள் இல்லை. அதனாலே தனியார் தொழில் பயிற்சி மையங்கள் இருந்தும்கூட, இல்லாத ஒரு நிலைதான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கருத்திலேகொண்டு, அரசின் சார்பிலே ஒரு தொழிற்பயிற்சி மையத்தை ஆரம்பித்தால், மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லி, அதைப்பற்றி ஒரு பரிசீலனையை அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென என்னுடைய சார்பிலே கேட்டுக்கொண்டு, என் தொகுதி மக்கள் சார்பாகவும் கேட்டுக்கொண்டு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நேரடிப் பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. எஸ்.கே. செல்வம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

73—

மருத்துவமனைக் கட்டடங்கள்

***7517—திரு. எஸ்.கே. செல்வம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைக் கட்டடங்கள் அனைத்தையும் பராமரிக்கின்ற பொறுப்பை உள்ளாட்சி நிர்வாகங்கள் ஏற்க முன்வந்தால் அதைச் செயல்படுத்த அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களில் நிதிநிலை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதால், அரசு மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை உள்ளாட்சி நிர்வாகங்களால் ஏற்க இயலாது.